DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 16/2020 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | **விக்கி** |
| Father's Name | : | ரவி |
| Village | : | திருப்புவனம் |
| Taluk | : | திருப்புவனம் |
| Calling | : | மெக்கானிக் |
| Religion | : | இந்து |
| Age | : | 29/2025 |

**(வழக்கின் எதிரி ஆஜர்)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 12.02.2025

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருப்புவனத்தில் வசித்து மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கின் மற்றொரு எதிரியான கணேசன் என்பவரை தெரியும். அ.சா.1 லோகேஸ்வரன் என்பவரை தெரியும். நான் திருப்புவனம் state bank அருகில் உள்ள தாய் ஆட்டோ ஸ்டோர் ஸ என்ற கடையில் வழக்கு சம்பவ காலத்தின் போது நான் வேலை செய்து கொண்டிருந்தேன். அ.சா.1 லோகேஸ்வரன் எனது கடையில் இருந்து 2 கடைகள் தள்ளி உள்ள சலூன் கடையில் வேலை பார்த்து வந்தார். கடந்த 23.08.2019 ம் தேதி இரவு சுமார் 09.00 மணியளவில் நான் வேலை முடித்துவிட்டு வீட்டிற்குசெல்வதற்காக நடந்து வந்து கொண்டிருந்தேன். அப்போது லோகேஸ்வரன் எனக்கு எதிர்தார்போல் சாப்பிட்டு விட்டு வந்துகொண்டிருந்தார். அப்போது அ.சா.1 எங்கே போய்விட்டு வந்து கொண்டிருக்கிறாய் என்று கேட்டேன். அப்போது நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது அ.சா.1 தாத்தா அங்கு வந்தார். நாங்கள்

பேசிக்கொண்டிருந்தபோது எங்களை வாளால் வெட்ட வந்தார். நான் பயந்து கொண்டு ஓடிவிட்டேன். நான் அ.சா. 1யும் ஓடி விடும் படி சொன்னேன். அப்போது எதிரி வாளால் அ.சா.1 லோகேஸ்வரனை கழுத்திலும் இடது கை மணிக்கட்டில் வெட்டிவிட்டார். அப்போது எனக்கு எதிரே வந்த தாத்தவிடம் அ.சா.1 கையை வெட்டி விட்டதாகவும் சொன்னேன். அதன் பிறகு காயம் பட்ட அ.சா.1 அவரது மாமா செந்தில் என்பவர் திருப்புவனம் மருத்துவமனைக்கு சிகிக்சைக்க அழைத்து வந்தார். போலிசார் வழக்கு சம்பந்மாக விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** :

வழக்கறிஞர் ஆஜர் குறுக்குவிசாரணை இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.02.12 11:37:46 +0000

Chief Judicial Magistrate

Sivagangai

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 16/2020 |
| Deposition of Witness for | : | P.W. 3 |
| Name | : | **செந்தில்** |
| Father's Name | : | ராசு |
| Village | : | திருப்புவனம் |
| Taluk | : | திருப்புவனம் |
| Calling | : | சலூான் கடை |
| Religion | : | இந்து |
| Age | : | 47/2025 |

**(வழக்கின் எதிரி ஆஜர்)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 12.02.2025

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது திருப்புவனம் பூங்கா நகரில் வசித்து வருகிறேன். அதே பகுதியில் கவின் என்ற பெயரில் சலூான் கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 லோகேஸ்வரன் எனது தங்கை மகன் ஆவார். அ.சா.1 சம்பவ காலத்தின் போது எனது கடையில் தான் வேலை பார்த்து வந்தார். சாட்சி ராசு எனது தகப்பானார். சாட்சி பிரபு எனது தம்பி ஆவார். ஆஜர் எதிரியை எனது தம்பி சொல்லி தெரியும். கடந்த 23.08.2019 ம் தேதி வெள்ளிகிழமை அன்று இரவு சுமார் 09.30 மணியளவில் எனது அப்பா போன்மூலமாக எனக்கு அ.சா.1 இடது கையில் வெட்டியதாக தகவல் சொன்னார். உடனே நான் திருப்புவனம் யூனியன் ஆப்பிஸ் அருகில் உள்ள பெட்ரோல் பல்லகிற்கு சென்றேன் அப்போது எனது அப்பா அ.சா.1 கையை பிடித்து கொண்டிருந்தார். என்ன என்று கேட்டபோது எம்ஜி ஆர் நகரை சேர்ந்தவர் வெட்டியாக சொன்னார். நான் பார்த்தபோது அ.சா.1 லோகேஸ்வரனுக்கு கழுத்திலும்

ஒரு வெட்டுக்காயம் இருந்தது. பின்பு அ.சா.1 ஐ திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு ஆட்டோ மூலம் அழைத்து சென்றோம். அதன் பிறகு மேல் சிகிக்சைக்காக அ.சா.1 மதுரை அரசு மருத்துமனைக்கு அனுப்பி வைத்தார்கள். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** :

வழக்கறிஞர் ஆஜர் குறுக்குவிசாரணை இல்லை

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2025.02.12 11:37:53 +0000

Chief Judicial Magistrate

Sivagangai